**செ.வெ.எண்: 452** **20.7.2007.**

# தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், சென்னை–28
# தேசிய பாலஸ்ரீ விருதுக்கான சென்னை மாவட்டப் போட்டிகள்

கலைகளில் புதுமை படைத்திடும் குழந்தைகளை ஊக்கப்படுத்திடும் வகையில் ஆண்டு தோறும் தேசிய இளந்திரு (National Bal Shree) எனும் தேசிய விருது குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்விருது படைப்புக் கலை, அறிவியற்கலை, மேடைக்கலை மற்றும் எழுத்துக் கலை ஆகியவற்றில் புதுமைகள் படைத்திடும் கற்பனை திறமையுடைய 9 லிருந்து 16 வயதுடைய சிறார்களுக்கு வழங்கப்படுகிறது. தேசிய இளந்திரு (ரூயவடைியேட கூயட ளூாசநந) விருது தெரிவு உள்ளூர் அளவில் மண்டல அளவில் மற்றும் தேசிய அளவில் என மூன்று கட்டங்களாக நடைபெறும்.

தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், சென்னை மாவட்ட அளவிலான உள்ளூர் தெரிவினை சென்னையில் 2007 ஜூலை 27முதல் 30 முடிய தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி வளாகத்திலுள்ள தாகூர் கலையரங்கில் காலை 9.30 மணி முதல் நடைபெறும்.

வயது 9 முதல் 16 வயது இரு பாலரும் (Boys & Girls)

27.07.2007 அன்று காலை மேடைக்கலையிலும் (Creative Performance) (பரதநாட்டியம்/ நாட்டுப்புற நடனம்/ குரலிசை/ இசைக் கருவி வாசித்தல்/ நடிப்பு போன்றவை) 28.07.2007 அன்று அறிவியற்கலையிலும் (Creative Innovative Science), 29.07.2007 அன்று எழுத்துக்கலையிலும் (Creative Writing) (கட்டுரை, கவிதை, கதை, வசனம் எழுதல், தமிழ் அல்லது ஆங்கிலத்தில்), 30.07.2007 அன்று படைப்புக்கலையிலும் (Creative Art)) (ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதல், கைவினை செய்தல், களிமண் உருவங்கள் செய்தல்) நடைபெற உள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தங்களது பிறந்தநாள் சான்றின் நகல் கொண்டு வருதல் வேண்டும்.

இத்தெரிவில் கலந்து கொள்ள வரும் சிறார்கள் போட்டிக்கு வேண்டிய பொருட்களை தாங்களே கொண்டு வர வேண்டும்.

இப்போட்டியில் தெரிவு செய்யப்பட்டோர் திருவனந்தபுரம் நகரில் நடைபெறும் தென் மண்டலப் போட்டியில் சவகர் சிறுவர் மன்ற செலவில் கலந்து கொள்ளலாம்.

போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி எண் 24618162

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.